03.02.2025.

கூடுதல் அமர்வு நீதிமன்றம்(விரைவு நீதிமன்றம்) விழுப்புரம்.

அமர்வு வழக்கு எண்.375/2021

அ.சா.12

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மருத்துவர். திரு. மதுவர்தனா | | |
| த/பெ | துளசிதாஸ் | | |
| கிராமம் | விழுப்புரம் | தொழில் | அரசு சட்டம் சார்ந்த முதுநிலை உதவி பேராசிரியர் |
| தாலுக்கா | விழுப்புரம் | வயது | 41/2025 |
| மாவட்டம் | விழுப்புரம் | தேதி | |

இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் தற்போது அரசு விழுப்புரம் மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் சட்டம் சார்ந்த மருத்துவதுறையில் முதுநிலை உதவி பேராசிரியராக பணி புரிந்து வருகிறேன். நான் அதே பணியிலிருந்த போது கடந்த 26/04/2021 அன்று விக்கிரவாண்டி காவல் நிலைய கு.எண்.221/2021 என்ற குற்ற வழக்கில் சம்மந்தப்பட்ட இறந்த நபர் ஐய்யப்பன் , 44 வயது த/பெ குப்பன், என்பவரது பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்து சான்று வழங்குமாறு விக்கிரவாண்டி காவல் நிலைய ஆய்வாளர் அவர்கள் கொடுத்த விண்ணப்பத்தின் பேரில் முதல் நிலை காவலர் எண். 2606 திரு. வெங்கடேசன் என்பவர் மூலம் பெற்றுக்கொண்டு அன்றைய தினமே பிற்பகல் 12 .30 மணிக்கு மேற்படி பிரேதத்தின் மீது பிரேத பரிசோதனையை தொடங்கினேன். மேற்படி இறந்த நபரின் உடலில் காணப்பட்ட அங்க மச்ச அடையாளங்கள் சரிபார்க்கப்பட்டது. உடலில் மீது பிணை விறைப்பு தன்மை , உடலின்மேல் பகுதியில் மிகுதியாக காணப்பட்டது. கண்கள்,

மற்றும் வாய் மூடிய நிலையிலும், விரல் நகங்கள் நீல நிறத்திலும் காணப்பட்டது. உடலின் மீது காணப்பட்ட காயங்கள் பின்வருமாறு:

1. சுமார் 3 செ.மீ நீளம், 2 செ.மீ அகலம், 0.5 செ.மீ ஆழமும் கொண்ட கிழிந்த காயமானது இடது பக்க தலையில் இடது காதின் பின்புறத்தில் இரண்டு தையல்களுடன் காணப்பட்டது. அதன் முனைகள் சரிவர இல்லாமல் சிவப்பு நிறத்திலும், கன்றிய காயங்களுடன் காணப்பட்டது.

2. சுமார் 4 செ.மீ நீளம், 3 செ.மீ அகலம், 0.5 செ.மீ ஆழமும் கொண்ட கிழிந்த காயமானது வலது கையின் கட்டை விரலில் அடிப்பகுதியில் காணப்பட்டது. அதன் முனைகள் சரிவர இல்லாமல் சிவப்பு நிறத்திலும், கன்றிய காயங்களுடன் காணப்பட்டது.

3. சுமார் 2 செ.மீ நீளம், 2 செ.மீ அகலம், 0.5 செ.மீ ஆழமும் கொண்ட கிழிந்த காயமானது மேல் உதட்டின் மேல் பகுதியில் காணப்பட்டது. அதன் முனைகள் சரிவர இல்லாமல் சிவப்பு நிறத்திலும், கன்றிய காயங்களுடன் காணப்பட்டது.

4. சுமார் 4 செ.மீ நீளம், 2 செ.மீ அகலம், 0.5 செ.மீ ஆழமும் கொண்ட கிழிந்த காயமானது இடது பக்க முகவாய் கட்டையில் 3 தையல்களுடன் காணப்பட்டது. அதன் முனைகள் சரிவர இல்லாமல் சிவப்பு நிறத்திலும், கன்றிய காயங்களுடன் காணப்பட்டது.

5. சுமார் 11 செ.மீ நீளம் , 9 செ.மீ அகலம், 0.5 செ.மீ ஆழம் கொண்ட கன்றிய காயமானது வலது முழங்கையின் வெளிப்புறத்தில் சிவப்பு நிறத்தில் காணப்பட்டது.

மேற்படி பரிசோதனையின் போது தலையில் முடி தோலில் சுமார். 16 செ.மீ நீளம், 12 செ.மீ அகலம், 0.5 செ.மீ ஆழம் கொண்ட கன்றிய காயமானது இடது பக்க தலையில் காணப்பட்டது. மண்டை ஓடு மூளை உறை ஆகியவை இயல்பான நிலையில் காணப்பட்டது. மூளையில் இடது புறத்தில் மற்றும் பக்க வாட்டில்

மேற்புறத்தில் இரத்த கட்டுகள் காணப்பட்டது. மண்டை ஓட்டின் அடிப்பகுதி இயல்பான நிலையில் காணப்பட்டது.

கழுத்தின் நாவடி மற்றும் குரல்வளையில் உள்ள எலும்புகள் அதனை சுற்றியுள்ள தசைகள் ஆகியவை இயல்பான நிலையில் , மூச்சு குழாய் மற்றும் உணவு குழாய் இயல்பான நிலையிலும், அன்னிய பொருட்கள் எதுவும் இல்லாமலும் காணப்பட்டது.

மார்பில் குறுத்து எலும்புகள், மற்றும் விலா எலும்புகள், நுரையீரல்கள், இருதயம், மற்றும் அதனை சுற்றியுள்ள தமனிகள் ஆகியவை இயல்பான நிலையில் காணப்பட்டது.

வயிற்றில் இரைப்பையில் சுமார் 100 மி. லி அளவிலான மஞ்சள் நிற திரவம் காணப்பட்டது. அதில் வாடை எதுவும் தென்படவில்லை. மற்ற உடல் உள்ளுறுப்புகள் அனைத்தும் இயல்பான நிலையிலும் வெட்டு தோற்றத்தில் இரத்தம் தோய்ந்த நிலையிலும் , இடுப்பு எலும்புகள் மற்றும் தண்டுவடம் ஆகியவை இயல்பான நிலையிலும் காணப்பட்டது.

பிரேத பரிசோதனையானது பிற்பகல் 1. 30 மணிக்கு முடிக்கப்பட்டது. உடலின் மீது காணப்பட்ட காயங்கள் அனைத்தும், இறப்பிற்கு முன்பாக ஏற்பட்ட காயங்கள் ஆகும். பரிசோதனையின் போது சேகரம் செய்யப்பட்ட இரத்தம் மற்றும் உடல் உள்ளுறுப்புகள் இரசாயன பரிசோதனைக்காக அனுப்பிவைக்கப்பட்டது. இரத்தம் வகை அறியும் பொருட்டு இரத்தம் தோய்ந்த பஞ்சானது ஆய்வகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டது. அந்த ஆய்வகத்தின் அறிக்கை 10/06/2021 அன்று பெறப்பட்டது. அதில் மேற்படி இறந்த நபரின் இரத்தத்திலும், உடல்

உள்ளுறுப்புகளிலும், சாராயமோ வேறு எதுவும் நச்சு பொருட்களோ தென்படவில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

**<u>மருத்துவர் கருத்துரை</u>**

மேற்படி பிரேத பரிசோதனை மற்றும் ஆய்வக அறிக்கை ஆகியவையின் அடிப்படையில் மேற்படி இறந்த நபர் தலையில் ஏற்பட்ட காயங்களின் விளைவினால் இறந்திருக்ககூடும் என்று எனது இ,றுதி கருத்துரை வழங்கினேன். என்னிடம் காட்டப்படும் ஆயுதங்கள் (எண்ணிக்கை 4 ) அவைகளால் தாக்கினால் மேற்படி நபருக்கு ஏற்பட்ட காயங்களும் ,இறப்பும் ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் உள்ளது. என்னிடம் காட்டப்படும் நான் வழங்கிய பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ- 13 ஆகும். என்னுடைய இறுதி கருத்துரை அ.சா.ஆ. 14 ஆகும். நான் பெற்ற இரசாயன பரிசோதனை அறிக்கை VPM/TOX.H /612/2021 நாள். 31.05.2021 பெறப்பட்டது.அது அ.சா.ஆ- 15 ஆகும். நான் பெற்ற குறுதியியல் அறிக்கை VPM/BIOL/ 198/ 2021 dt.31/05/2021 . அ.சா.ஆ- 16 ஆகும். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

வழக்கில் என்னை யார் விசாரணை செய்தார்கள் என்று எனக்கு சரிவர ஞாபகம் இல்லை. அவ்வாறு விசாரிக்கும் காலத்தில் ஆயுதங்களை காண்பித்து என்னிடம் கருத்துரை பெறப்பட்டதா என்று ஞாபகம் இல்லை. 5 காயங்களின் வயது குறித்து நான் எனது அறிக்கையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. சொல்லியுள்ளேன். அந்த காயங்களின் நிறங்களை பற்றி குறிப்பிட்டுள்ளேன். அதுவே காயங்களின் வயதாகும். காயம்பட்ட நபர் இருசக்கர வாகனத்தில் செல்லும்

போது தூக்கி வீசப்படும் போது இது போன்ற  காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான்.   நான் குறிப்பாக இந்த ஆயுதங்களால் காயம் ஏற்பட்டது என்று எனது அறிக்கையில் சொல்லவில்லை என்றால் சரிதான் அது போன்று சொல்லும் வழக்கம் இல்லை.

**மறுவிசாரணை**

**இல்லை**